The Times of India

Dated: 12-07-2024


# Cross Vote On Mind

*Today's MLC election in Maharashtra is a trailer to the potboiler that the state's assembly polls will be*

It's match time again in Maharashtra. If the Lok Sabha election was considered a semifinal to Oct's high-stakes assembly poll, the vote today to elect 11 legislative council members is no less significant. Maharashtra, one of six states with a legislative council, has 78 members, 30 of whom are elected by MLAs. All eyes are on the 274 MLAs expected to cast their vote today to elect these 11 members from 12 candidates.

**Cross currents** | If all goes to plan – and safe to say no one expects it to – Mahayuti is set to win 9. BJP has 5 nominees, Shinde Sena 2 and Ajit Pawar 2. MVA has fielded 3, though it can win two, given its numbers in the lower house. Then there's Uddhav Thackeray's swag, "We wouldn't have fielded a third nominee had we not been confident." It's crunch time.

**Simply cross** | Flashback to June 2022's MLC election has parties jittery. Matters started unravelling for then CM Uddhav's MVA govt, with cross-voting in that MLC election. MVA legislators cross-voted, resulting in Congress losing one of its two allotted seats, which came as a shock right after a Rajya Sabha loss. At the time, Fadnavis had explained the cross-vote as fallout of a "lot of anger in MVA". It was soon followed by Eknath Shinde's claim on the party and walkout with MLAs.



**Fingers crossed** | With 29 of 48 LS seats now in its kitty, MVA is banking on cross-votes mostly from Shinde Sena and Ajit Pawar's NCP. That's why Mahayuti and UBT Sena corralled their MLAs into luxury safe-houses, Mumbai's five-star hotels.

An MLC winner needs 23 first-preference votes. BJP has 103 MLAs, Shinde Sena 38, Ajit Pawar NCP 42, Congress 37, UBT Sena 15 and Sharad Pawar NCP 10. Prakash Ambedkar's BVA has 3 and he has fallen out with MVA. SP has 2, AIMIM 2, PJP 2 and 7 parties have 1 each. There are 13 independent MLAs. There's plenty on to ensure MLAs stay in place, and to snag the 'non-aligned' MLA votes.

**Lines crossed** | In a right-earnest fight are the two Senas and two NCPs. It is here that loyalty lines blur. Ajit Pawar, especially, finds himself putting out videos in self-praise even as uncle Sharad Pawar says his arms, and doors, are open to MLAs who followed the nephew to Mahayuti. Mahayuti is also hawk-eyed on UBT's surprise nominee, Milind Narvekar – with cross-party influence and camaraderie. It's jitters all around.

தினத்தந்தி
12 JUL 2024

# விக்கிரவாண்டியில் நாளை வாக்கு எண்ணிக்கை

## 3 அடுக்கு பலத்த பாதுகாப்பு

விழுப்புரம், ஜூலை.12-
விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் நாளை வாக்கு எண்ணிக்கை நடக்கிறது. இதையொட்டி அங்கு 3 அடுக்கு பலத்த போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### இடைத்தேர்தல்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று முன்தினம் 276 வாக்குச்சாவடிகளில் நடைபெற்றது. இத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, பா.ம.க. வேட்பாளர் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் டாக்டர் அபிநயா உள்பட 29 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் போட்டியில் உள்ளனர்.

இத்தொகுதியில் 1லட்சத்து 95 ஆயிரத்து 495 பேர் வாக்களித்துள்ளனர். இதன் வாக்குப்பதிவு சதவீதம் 82.47 ஆகும்.

### சீல் வைப்பு

இதனிடையே அனைத்து வாக்குச்சாவடி மையங்களில் இருந்தும் வாக்குப்பதிவு எந்திரங்கள் நேற்று முன்தினம் இரவு, வாக்கு எண்ணும் மையமான பனையபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர், அங்குள்ள பாதுகாப்பு அறையில் வாக்குச்சாவடி வாரியாக தனித்தனியாக வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து நேற்று காலை 11 மணியளவில் மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான பழனி, தேர்தல் பொதுப்பார்வையாளர் அமித்சிங் பன்சால் ஆகியோர் வாக்கு எண்ணும் மையத்திற்கு நேரில் சென்று வாக்குப்பதிவு எந்திரங்கள் அனைத்தும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதா என பார்வையிட்டனர். பின்னர் வேட்பாளர்கள், முகவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் அந்த அறையை விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகர் பூட்டி சீல் வைத்தார்.

### நாளை வாக்கு எண்ணிக்கை

இந்நிலையில் நாளை (சனிக்கிழமை) வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

அதன்படி நாளை காலை 6 மணிக்கெல்லாம் வாக்கு எண்ணுவதற்கான ஆயத்த பணிகள் தொடங்கப்படும். காலை 7.30 மணியளவில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையின் சீல் அகற்றப்பட்டு ஒவ்வொரு வாக்குச்சாவடி வாரியாக மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு செல்லப்பட உள்ளது.

### காலை 8 மணிக்கு தொடங்குகிறது

சரியாக காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. முதலாவதாக தபால் வாக்குகள் எண்ணப்படும். அதன் பிறகு 30 நிமிடங்கள் கழித்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவாகியுள்ள வாக்குகளின் எண்ணிக்கை தொடங்கப்படும். இதற்காக 14 மேஜைகள் அமைக்கப்பட்டு வாக்கு எண்ணிக்கை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொகுதியில் வாக்கு எண்ணிக்கை 20 சுற்றுகளாக நடைபெற உள்ளது. ஒவ்வொரு சுற்று முடிவிலும் வாக்கு எண்ணிக்கை முடிவுகள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும்.

Multi layered security at Vikravandi counting center counting starts tomorrow 7am for Vikravandi A.C

Dinamalar

Dated: 12.07.2024

# நாளை எண்ணிக்கை

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டசபை தொகுதி இடைத்தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. தொடர்ந்து, ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் ஓட்டு எண்ணும் மையமான பனையபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஸ்ட்ராங் ரூமில் வைத்து சீல் வைக்கப்பட்டது.

அதை தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அதிகாரியான கலெக்டர் பழனி நிருபர்களிடம் கூறியதாவது:

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் ஓட்டு எண்ணிக்கை நாளை நடைபெற இருப்பதையொட்டி, அனைத்து முன்னேற்பாடுகளும் முடிந்து தயார் நிலையில் உள்ளது.

ஓட்டு எண்ணும் மையத்திற்கு துணை ராணுவ படை, சிறப்பு காவல் படை, போலீசார் என 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சுழற்சி முறையில், ஒரு நாளைக்கு 150 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இருபது சுற்றுகளாக ஓட்டு எண்ணிக்கை நடைபெற உள்ளது. ஓட்டு எண்ணும் மையம் முழுதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

Counting starts tomorrow for Vikravandi A.C

தினகரன்

12 JUL 2024

# வாக்கு எண்ணும் மையத்திற்கு 3 அடுக்கு பாதுகாப்பு



▶ விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நேற்று முன் தினம் காலை 7 மணிக்கு துவங்கி மாலை 6 மணி வரை விறுவிறுப்பாக நடந்தது. இதில் 82.48 சதவீதம் வாக்குகள் பதிவானது. அனைத்து வாக்குச்சாவடிகளில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் சீல் வைக்கப்பட்டு போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையமான பனையபுரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கு நேற்று முன்தினம் இரவு கொண்டு வரப்பட்டு, மாவட்ட தேர்தல் அதிகாரி கலெக்டர் பழனி மற்றும் அனைத்து கட்சி முகவர்கள் முன்னிலையில் ஸ்டிராங் ரூமில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டன. வாக்கு எண்ணும் மையத்தில் துணை ராணுவம், துப்பாக்கி ஏந்திய ஆயுதப்படை போலீசார், உள்ளூர் போலீசார் என 3 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. நாளை காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை துவங்குகிறது. 16 மேஜைகளில் 20 சுற்றுகளாக வாக்குகள் எண்ணப்படுகின்றன. காலை 11 மணியளவில் வெற்றி நிலவரம் தெரிந்து விடும்.

Multi layered security at Vikravandi Counting center

Counting starts by Tomorrow 7.am for Vikravandi A.C

தினமணி

12 JUL 2024

# விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: நாளை வாக்கு எண்ணிக்கை

விழுப்புரம், ஜூலை 11: விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் சனிக்கிழமை (ஜூலை 13) எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

இதையொட்டி, வாக்கு எண்ணிக்கை மையமான பனையபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மூன்றடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

விக்கிரவாண்டி தொகுதி சட்டப்பேரவைத் தொகுதி திமுக உறுப்பினர் நா.புகழேந்தி மறைவைத் தொடர்ந்து, இந்தத் தொகுதிக்கு ஜூலை 10-ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டது. தொடர்ந்து, ஜூன் 14-ஆம் தேதி முதல் வேட்பு மனுக்கள் பெறப்பட்டு, ஜூன் 24-ஆம் தேதி மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெற்றது. ஜூன் 26-ஆம் தேதி வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டது.

திமுக சார்பில் அந்தக் கட்சியின் விவசாயத் தொழிலாளர் அணி மாநிலச் செயலர் அன்னியூர் அ.சிவா, பாமக சார்பில் வன்னியர் சங்க மாநில துணைத் தலைவர் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி சார்பில் மருத்துவர் பொ.அபிநயா உள்ளிட்ட 11 கட்சிகளின் வேட்பாளர்கள், 18 சுயேச்சைகள் என மொத்தம் 29 வேட்பாளர்கள் களம் கண்டனர்.

**82.48 சதவீத வாக்குப் பதிவு:** வாக்குப் பதிவுக்காக தொகுதி முழுவதும் 276 வாக்குப் பதிவு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. புதன்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு நடைபெற்றது.

**பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்**



விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை மையமான பனையபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறை முன் வியாழக்கிழமை துப்பாக்கி ஏந்தியபடி பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட மத்திய பாதுகாப்புப் படையினர்.

1,16,962 ஆண்கள், 1,20,040 பெண்கள், 29 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 2,37,031 வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

இவர்களில் 95,536 ஆண்கள், 99,944 பெண்கள், 15 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 1,95,495 வாக்காளர்கள் வாக்களித்தனர். இது, 82.48 சதவீத வாக்குப் பதிவாகும்.

வாக்குப் பதிவு நடவடிக்கைகள் முடிவடைந்ததும் 276 வாக்குப் பதிவு மையங்களிலும் வாக்குப் பதிவுக்காக பயன்படுத்தப்பட்ட 552 வாக்குப் பதிவு கருவிகள், 2,765 கட்டுப்பாட்டு கருவிகள், 276 யாருக்கு வாக்களித்தோம் என்பதை உறுதிசெய்யும் கருவிகளுக்கு (விவிபேட்) 'சீல்' வைத்து, வாக்கு எண்ணிக்கை மையமான பனையபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அதிகாரிகள் கொண்டு சென்றனர்.

அங்கு, பாதுகாப்பு அறையில் வாக்குப் பதிவு இயந்திரங்களை வைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முகவர்கள், வேட்பாளர்கள் முன்னிலையில் அந்த அறைக்கு 'சீல்' வைத்தனர்.

**20 சுற்றுகளாக...:** இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் சனிக்கிழமை எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன. 20 சுற்றுகளாக வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது. இதற்காக 14 மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன. தபால் வாக்கு எண்ணிக்கைக்காக 2 மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சுற்றாக தபால் வாக்குகள் எண்ணப்படவுள்ளன.

**மூன்றடுக்கு பாதுகாப்பு:** வாக்கு எண்ணிக்கை மையமான பனையபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் விழுப்புரம் மாவட்ட எஸ்.பி. தீபக் சிவாச் தலைமையில் மூன்றடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

24 மணி நேரமும் சுழற்சி முறையில் 3 பிரிவுகளாக போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு சுழற்சிக்கு ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், 8 உதவி ஆய்வாளர்கள், 18 காவலர்கள், 14 சிறப்பு காவல் படையினர், 8 மத்திய காவல் பாதுகாப்புப் படையினர் என நாளொன்றுக்கு 150 பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கை மையம் முழுவதும் போலீஸ் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை மையத்தின் முக்கியப் பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, வாக்குப் பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறை, வாக்கு எண்ணும் மையத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகளும் கண்காணிப்பு மையம் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வாக்கு எண்ணிக்கை மையம், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறை முன் துப்பாக்கி ஏந்திய போலீஸார் மற்றும் மத்திய பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## 18 மாதங்களில் 3 இடைத்தேர்தல்கள்: வாக்கு சதவீதத்தில் முந்திய விக்கிரவாண்டி

சென்னை, ஜூலை 11: கடந்த ஒன்றரை ஆண்டுகளில் நடந்த மூன்று இடைத்தேர்தல்களில் பதிவான வாக்கு சதவீதத்தில் விக்கிரவாண்டியே முந்தி நிற்கிறது.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்றதும், கடந்த ஆண்டு பிப்ரவரியில் முதல் இடைத்தேர்தல் நடைபெற்றது. ஈரோடு கிழக்கு தொகுதியில் திமுக அணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியின் எம்எல்ஏவான ஈவெரா திருமகன் மறைவைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு பிப்ரவரியில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் போட்டியிட்டு வென்றார். மொத்தமுள்ள 2.26 லட்சம் வாக்குகளில், 74.79 சதவீத வாக்குகள் பதிவாகின.

இரண்டாவதாக கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதிக்கு இடைத்தேர்தல் நடந்தது. அந்தத் தொகுதியின் எம்எல்ஏவாக இருந்த விஜயதரணியின் ராஜிநாமாவால் மக்களவைத் தேர்தலுடன் விளவங்கோடு பேரவைக்கும் இடைத்தேர்தல் நடத்தப்பட்டது.

இந்தத் தேர்தலில் மொத்தமுள்ள 2.37 லட்சம் வாக்குகளில், 65.37 சதவீத வாக்குகள் பதிவாகின. இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட தாரகை கத்பட் வெற்றி வாகை சூடினார்.

**விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:** விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி எம்எல்ஏவாக இருந்த என்.புகழேந்தி உடல்நலக் குறைவால் காலமானதையடுத்து, அந்தத் தொகுதிக்கும் மக்களவைத் தேர்தலுடனேயே இடைத்தேர்தல் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியான ஒருசில நாள்களில் விக்கிரவாண்டிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

**முந்திய விக்கிரவாண்டி:** அதன்படி ஜூலை 10-ஆம் தேதி நடைபெற்ற விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலை அதிமுக புறக்கணித்த நிலையில், திமுக, பாமக, நாதக என மும்முனைப் போட்டி நிலவியது. இந்தத் தொகுதியில் மொத்தமுள்ள 2.37 லட்சம் வாக்குகளில், 82.48 சதவீத வாக்குகள் பதிவாகின. இது, கடந்த ஒன்றரை ஆண்டுகளில் நடைபெற்ற மற்ற இரண்டு இடைத்தேர்தல்களில் பதிவான வாக்குகளைக் காட்டிலும் அதிகமாகும்.

Multi layered security at vikravandi counting center Counting starts tomorrow by 7am at vikravandi AC.